**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு.எண்.168/2018**
**நாள் : 20/02/2023, திங்கட்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - குமார் | த/பெயர் - நரசிம்மன் |
| வயது - 42 | தொழில் - |
| விலாசம் - எண்.4, யுனைடட் காலனி,<br>2வது குறுக்கு தெரு, கொளத்தூர்,<br>சென்னை - 99. | |

**குறுக்கு விசாரணை (PW1)**

எனக்கு எழுத, படிக்க தெரியும். வாதுரை மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை தெரிந்துக்கொண்டு தான் நான் கையொப்பம் போட்டுள்ளேன். தாவா சொத்தில் நான் குடியிருந்து வருகிறேன். நீங்கள் தாவா சொத்தில் குடியிருப்பதாக இருந்தால் அந்த முகவரியை தானே வாதுரையிலும், நிரூபணவாக்குமூலத்திலும் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்றும், ஆனால் வேறு முகவரியை நீங்கள் குறிப்பிட்டுள்ளதற்கு காரணம் என்ன என்று கேட்டால் முதலில் தாவா சொத்தில் குடியிருந்தோம். பின்னர் குழந்தைகள் படிப்பிற்காக வாடகை வீட்டிற்கு சென்றுவிட்டோம். முன்னர் கேள்வி கேட்டதற்கு தாவா சொத்தில் வசிப்பதாக பொய்சாட்சி கூறினீர்களே என்றால் முன்பு வசித்தேன். தற்போது வசிக்கவில்லை. தாவா சொத்தில் நீங்கள் எந்த காலகட்டத்திலும் வசிக்கவில்லை என்றும், வழக்கிற்காக வசித்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் வீடுகட்டி ஒரு மாதம் குடியிருந்தோம். பின்னர் வாடகை வீட்டிற்கு சென்றுவிட்டோம். உங்கள் சொத்திற்கு எந்த திசையில் 1ம் பிரதிவாதியின் வீடு இருக்கிறது என்றால் திசைகள் எனக்கு தெரியாது. எங்கள் வீட்டின்

வாசப்படிக்கு முன்பு 24 அடி சாலை அமைந்துள்ளது. தாவா சொத்தை எந்த வருடம் வாங்கினேன் என்று எனக்கு நியாபகம் இல்லை. நான் தாவா சொத்து வாங்கும்போது ஒரு பக்கம் வீடு இருந்தது. மற்ற பக்கம் காலியாக இருந்தது. அது எந்த திசை என்று எனக்கு தெரியாது. நான் தாவா சொத்து வாங்கும்போது 1ம் பிரதிவாதியின் இடமும் காலியாக தான் இருந்தது. வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோரில் யார் முதலில் வீடு கட்டியது என்றால் நான் தான் முதலில் வீடு கட்டினேன். நான் எனது கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகளின்படி அளந்துதான் வீடு கட்டினேன். கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சதுர அடிக்குள் தான் வீடு கட்டினேன். அதை தாண்டி வீடு கட்டவில்லை. எனது கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள முழு பரப்பளவிற்கும் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தை நீங்கள் வாங்கும்போது அளந்து பார்த்து தான் வாங்கினீர்கள் என்றால் சரிதான். வழக்கு போடுவதற்கு முன்பு வருவாய்த்துறையில் நில சர்வேயரை வைத்து இடத்தை அளந்து ஆவணங்கள் தயார் செய்து பின்னர் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். அதே நில சர்வேயரை வைத்து தான் வழக்கறிஞர் ஆணையர் மூலம் அளந்து அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கறிஞர் ஆணையர் மூலம் நில சர்வேயரை வைத்து அளக்கும்போது 1ம் பிரதிவாதி விஜயகுமார் அந்த இடத்தில் இல்லை என்றால் சரிதான். வழக்கறிஞர் ஆணையர் 1ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பியது எனக்கு நேரடியாக தெரியும். தாவா இடத்தை அளக்கும்போது 1ம் பிரதிவாதிக்கு தகவல் கொடுத்தோம். அவர் வரவில்லை. இடத்தை அளப்பதற்கு 2 நாட்களுக்கு முன்பு ஏதேனும் அறிவிப்பு கொடுத்தீர்களா என்றால் எனக்கு தெரியாது. வழக்கறிஞர் ஆணையர் 1ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு கொடுத்தாரா, இல்லையா என்று கேட்டால் கொடுத்தார். வழக்கறிஞர் ஆணையர் 1ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு கொடுத்திருந்தால் அதனுடைய நகலை அறிக்கையுடன் இணைத்து தாக்கல் செய்திருப்பார் என்றும், அறிவிப்பு எதுவும் கொடுக்காததால் தான்

ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்யவில்லை என்றும், நீங்கள் நீதிமன்றத்தில் பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எந்த வருடம் வீடு கட்டினீர்கள் என்றால் நியாபகம் இல்லை. தாவா சொத்தில் நீங்கள் கிரையம் பெற்ற ஒரு வருடத்திற்குள் முதல் பகுதியை கட்டினீர்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து கிரையம் பெற்ற பிறகு சுமார் 6, 7 வருடம் கழித்து தான் வீடு கட்டினேன்.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**